# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் மற்றும் வைப்பு ஏற்றல்

## அத்தபத்து முதியன்செலாக தம்மிக்க குமார அத்தபத்து மற்றும் இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் புரடக்'ன் இன்டர்நெ'னல் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் (PV 125740)

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் கொண்டுநடாத்தப்பட்ட விசாரணையொன்றினைத் தொடர்ந்து 2020.09.15ஆம் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது **“சமன் கெகுலா”, அம்பலாவ, டெமடலுவ, குருநாகல்** என்ற இடத்திலுள்ள அத்தபத்து முதியன்செலாக தம்மிக்க குமார அத்தபத்து மற்றும் இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் புரடக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் இரண்டும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளனர் அல்லது கொண்டு நடாத்துகின்றனர் அல்லது வைப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர் அல்லது ஏற்றுக்கொள்கின்றனர் எனத் தீர்மானித்துள்ளது என்றும் வைப்பாளர்களுக்கு முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்கு காலம் குறிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டமொன்றினைச் சமர்ப்பிக்குமாறு சொல்லப்பட்ட ஆளுக்கு/நிறுவனத்திற்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்றும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை என 2020.10.21 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது. மேலும், நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இது தொடர்பில் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடரக் கோரி இலங்கை மத்திய வங்கியினால் 2020.11.02 அன்று சட்டமா அதிபரின் திணைக்களத்திற்கு அறிக்கையொன்று அனுப்பப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியானது மேற்குறித்த தனிப்பட்டவரும் கம்பனியும் வைப்புக்களை அல்லது ஏதேனும் வேறு வடிவில் நிதியங்களைக் கோருதல் மற்றும் திரட்டுதல், சொத்துக்களை விற்பனை செய்தல்/பாராதீனப்படுத்தல், ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளுதல் என்பவற்றைத் தடுக்கின்ற தடைக் கட்டளைகளை ஏற்கனவே வழங்கியுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் தடைக்கட்டளைகளை 2021.01.15 வரை நீடித்துள்ளது.

**பணிப்பாளர்,**
**வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

0112477000, 0112440330, 0112330220 @ dsnbfi@cbsl.lk http://www.cbsl.gov.lk